(எட்டாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(5).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 பெப்ரவரி 20 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2020 மார்ச் 03, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 31 ஆம் திகதிய 2147/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 திசெம்பர் 14 ஆம் திகதிய 2153/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 4, 13 மற்றும் 17 ஆம் பிரிவுகளின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 செப்டெம்பர் 27 ஆம் திகதிய 2142/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 05/2019)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 22 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசம்பர் 03 ஆம் திகதிய 2152/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 07/2019)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 3),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 12, 14 மற்றும் 22 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசம்பர் 03 ஆம் திகதிய 2152/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 08/2019)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 4),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 22 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசம்பர் 03 ஆம் திகதிய 2152/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 09/2019)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர்,— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் (105 ஆம் அத்தியாயமான) 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19(உ) பிரிவின் கீழ், சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 26 ஆம் திகதிய 2055/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் அவ்வொழுங்குவிதிகளை திருத்தும் பொருட்டு சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 திசெம்பர் 26 ஆம் திகதிய 2155/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.02.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2020 மார்ச் 17, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

20/2020

கௌரவ புத்திக பத்திறண,— உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பற்கு,— (1)

(அ) (i) 2018 யூலை 07 ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவு தின விழாவிற்கான உணவு வழங்கல் கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்ட நிறுவனம் அல்லது ஆள் யார் என்பதையும்;

(ii) அதற்கென ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி விழாவிற்கு உணவுகளை வழங்கும் பொருட்டு கேள்வி கோரப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கென சமர்பிக்கப்பட்ட கேள்வி கோரல்கள் எத்தனை என்பதையும்;

(v) அக்கேள்வி கோரல்களை முன்வைத்த நிறுவனங்கள்/ஆட்களினது பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி உணவு வழங்கலை மேற்கொண்ட ரியாஸ் என்பவர் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் பணிப்பாளர் பதவியிலுள்ள ஒருவர் என்பதையும்;

(ii) உரிய முறையியல்கள் இன்றி அவர் இப்பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) இது தொடர்பில் விசாரணையொன்று நடத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

61/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தின் போது எதிர்நோக்கிய இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அவற்றின் போது இறந்துள்ள மற்றும் காணாமல் போயுள்ள ஆட்களின் எண்ணிக்கையும் நேர்ந்துள்ள சொத்துத் சேதங்களும் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட நிவாரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

87/2020

கௌரவ ஹேஷா விதானகே,— உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பட்டப்படிப்பு பாடநெறிகளைப் பயில்வதற்காக வழங்கப்பட்டிருந்த வாய்ப்பினைக் குறைப்பதற்காக கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) 2010 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை வெளிவாரி பட்டப்படிப்பு பாட நெறிகளுக்காக இணைத்துக் கொள்ளும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்கள் பயிலும் பட்டப்படிப்பு பாடநெறிகள் யாவை என்பதையும்;

(iv) வெளிவாரிப் பட்டதாரிகள் உருவாக்கப்படுவதனை மேலும் அதிகரிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

98/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய எற்றுமதி தயாரிப்பு வலயத்தின் புகுமுக வீதியை நிர்மாணிக்கையில் சேதமுறுகின்ற ஆதனங்கள் மற்றும் கையகப்படுத்துகின்ற காணிகளுக்கு நட்டஈடு வழங்குதல் இடம்பெறுகின்றதா;

(ii) ஆமெனில் நட்டஈடு பெறுநர்களின் எண்ணிக்கை யாது;

(iii) அதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நட்டஈட்டின் அளவு யாது;

(iv) இன்றளவில் இது சம்பந்தமாக ஏதேனும் கொடுப்பனவு இலங்கை முதலீட்டுச் சபையினால் உடுபத்தாவ பிரதேச செயலாளருக்கு செலுத்தப்பட்டுள்ளதா;

(v) ஆமெனில் அதன் அளவு யாது;

(vi) மேற்படி செலுத்துதல் மேற்கொள்ளப்பட்ட திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

125/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்னர் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 150,000/- சலுகை விலைக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) மேற்படி மோட்டார் சைக்கிள்களை வழங்குகையில் எவ்விதமான நிபந்தனைக்கும் கட்டுப்படுத்தவில்லை என்பதையும்;

(iii) ஆயினும் பெரும்பாலும் மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொண்ட ஓய்வுபெற்ற பொலிசு உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் ரூபா 150,000.00 - ரூபா 200,000.0 0 இடைப்பட்ட பணத்தொகையைச் செலுத்துமாறு வற்புறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) அப்பணத்தொகையைச் செலுத்தும்வரை ஓய்வூதியம் செலுத்துதல் ஆரம்பிக்கப்படமாட்டாதென அவர்களின் சேவை நிலையங்களிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(v) இதற்கிணங்க இளைப்பாறிய பெருந்தொகையான பொலிசு உத்தியோகத்தர்கள் நீண்டகாலமாக ஓய்வூதியம் கிடைக்காமையால் நிர்க்கதி நிலையிலுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தும் பொருட்டு தாமதமின்றி பொருத்தமான முறையியலொன்றை வகுப்பாரா;

(ii) ஆமெனில் அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

131/2020

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் முக்கிய நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) அதன் பணிகள் யாவை என்பதையும்;

(iii) நுகர்வோர் அலுவல்களுக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்படுகின்ற எவ்வாறான குற்றங்கள் தொடர்பாக மேற்படி அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்க முடியுமென்பதையும்;

(iv) அதிகாரசபையின் அதிகாரங்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2017 ஆம் ஆண்டில் மேற்படி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட,

(i) சுற்றி வளைப்புகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்களின் எண்ணிக்கையும் அவை மேற்கொள்ளப்பட்ட இடங்களும் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நீண்ட தூர சேவைகள் பயணிகள் போக்குவரத்து பேருந்துகள் நிறுத்தப்படுகின்ற அநேகமான உணவகங்களில் அதிக விலைக்கு உணவுகளை விற்பதோடு தரக்குறைவான உணவுகளை விற்பதாகவும், இதனால் நுகர்வோர் தெரிவு வரையறுக்கப்பட்டிருப்பதனால் நுகர்வோர் பெரிதும் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா;

(ii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

134/2020

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 செப்டெம்பர் 30 ஆம் திகதிக்கு தேசிய சுவடிகூடத் திணைக்களத்தில் வெற்றிடமாகியுள்ள பணிப்பாளர் மற்றும் உதவி பணிப்பாளர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பதவிக்கும் வெற்றிடம் ஏற்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்ப இது வரை நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

137/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்புக்கு வெளியிலான அதிவேக வீதி மற்றும் மத்திய அதிவேக வீதி ஆகிய அதிவேக வீதிகள் இரண்டிலும் ஒவ்வொரு படிமுறையும்,

(i) ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் நிறைவு செய்யப்பட வேண்டிய திகதி யாதென்பதையும்;

(ii) தூர அளவுகள் எவ்வளவென்பதையும்;

(iii) சாத்தியவள ஆய்வினை மேற்கொண்ட கம்பெனிகள் மற்றும் அதனை மேற்கொண்ட வருடம் யாது என்பதையும்;

(iv) ஆரம்ப மதிப்பீட்டு செலவு மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(v) பெற்றுக்கொண்ட கடன்தொகையின் அளவு, வட்டி மற்றும் மீள செலுத்தும் காலப்பகுதி யாதென்பதையும்;

(vi) அக்கடன்களை பெற்றுக் கொண்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(vii) கட்டுமான ஒப்பந்தங்களை மேற்கொண்ட அல்லது தற்போது மேற்கொள்கின்ற கம்பெனிகள் யாவை என்பதையும்;

(viii) நிர்மாணிப்பதற்காக செய்யப்பட்ட செலவு அல்லது செலவாகும் என எதிர்பார்க்கப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ix) ஒரு கிலோமீற்றருக்காக செய்யப்பட்ட செலவு அல்லது செலவாகும் என எதிர்பார்க்கும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

21/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் வருடத்தில் சட்டவிரோதமாக இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள் இலங்கை சுங்கத்தினால் கைப்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், கைப்பற்றப்பட்ட வாகன உதிரிப்பாகங்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி வாகன உதிரிப்பாகங்கள் எந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பதையும்;

(iv) அவ்வாறான சட்டவிரோத நிறுவனங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வாறான சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இங்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வாகன உதிரிப்பாக உற்பத்தியை கைத்தொழில் துறையாக இந்நாட்டில் விரிவாக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

62/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நல்லாட்சி அரசாங்கத்தின் பின்னர், வானிலை பற்றி கற்பதற்காக வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்கள் சென்ற நாடுகள் மற்றும் குறிப்பிட்ட பாடநெறியின் பெயர்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி பயணங்களுக்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பயணங்களின் மூலம் நாட்டுக்கு கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

88/2020

கௌரவ ஹேஷா விதானகே,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1996 கிரிக்கட் உலகக் கிண்ணம் வெற்றியீட்டப்பட்ட போது அச்சந்தர்ப்பத்தில் இலங்கை கிரிக்கட் சபையின் தலைவர் யார் என்பதையும்;

(ii) அன்று முதல் இதுவரை கட்டுப்பாட்டுச் சபைக்கு நியமனம் பெற்றுள்ள தலைவர்கள் மற்றும் அவர்களின் நிருவாகக் காலஎல்லைகள் தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி நிருவாகக் காலஎல்லைகளுக்குள் இலங்கை அணி பங்கேற்ற டெஸ்ட், ஒருநாள் 50 ஓவர் மற்றும் 20 ஓவர் போட்டிகளின் எண்ணிக்கைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) மேற்படி போட்டிகளின் வெற்றி, தோல்வி மற்றும் பெறுபேறுகள் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை கிரிக்கட் உலகக் கிண்ணத்தை வெற்றியீட்டியுள்ள ஒரு நாடாக உள்ள போதிலும் நிருவாக குறைபாடுகள் காரணமாக தற்போது இலங்கையின் கிரிக்கட் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) மீண்டும் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்துவதற்கு மற்றும் வெற்றிகளை அடைந்துகொள்வதற்காக அமைச்சு மேற்கொள்ளும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

99/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் ஆரம்பப் படிமுறைக்காக நீரைப் பெற்றுக்கொள்வதற்காக செலவாகின்ற பணத்தொகை யாது;

(ii) மேற்படி ஒப்பந்தம் வழங்கப்பட்ட திகதி யாது;

(iii) அதற்கான காலப்பகுதி யாது;

(iv) அதன் நிர்மாணப் பணிகள் இன்றளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

126/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புடவைக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானதாகக் காணப்பட்ட துல்ஹிரிய பிடவைத் தொழிற்சாலை முதலில் பொம்பே ரெக்ஸ் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது என்பதையும்;

(ii) பின்னர் மேற்படி கம்பனியினால் இது கொரியக் கம்பனியொன்றான காபுல் லங்கா நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது என்பதையும்;

(iii) காபுல் லங்கா கம்பனியினால் இது வாஸ் கோல்டன் நிறுவனத்திடம் பொறுப்பளிக்கப்பட்ட போது ஊழியர்களுக்கு பணிக்கொடை மற்றும் நட்டஈடு செலுத்தப்பட்டது என்பதையும்;

(iv) இவ்வனைத்து சந்தர்ப்பங்களிலும் நிறுவனம் விற்பனை செய்யப்பட்டிருப்பது ஊழியர்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் உட்படவாகும் என்பதையும்;

(v) அச்சந்தர்ப்பத்தில் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் வசித்துவந்த ஊழியர்களுக்கு, எந்தவொரு தொகையும் செலுத்தப்படவில்லை என்பதையும்;

(vi) இலங்கை முதலீட்டுச் சபை தற்போது இந்த வாசஸ்தலங்களில் வசித்துவருகின்ற ஆட்களை அகற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சேவையிலிருந்து ஓய்வுபெறும் போது அல்லது சேவையிலிருந்து நீக்கும் போது இந்த ஊழியர்களுக்குச் செலுத்தப்படாத பணிக்கொடை மற்றும் நட்டஈட்டைச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் சுமார் 40 வருடங்கள் வசித்துவருகின்ற ஆட்களை மேற்படி வாசஸ்தலங்களிலிருந்து வெளியேற்றும் முயற்சியைத் தடுத்து வீடுகளின் உரித்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

132/2020

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மத்திய அதிவேக நெடுஞ்சாலையில், குருநாகலையிலிருந்து கலகெதர வரையில் நிர்மாணிக்கப்படும் பகுதியின்,

(i) ஒட்டுமொத்த தூரம்;

(ii) மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்தச் செலவு;

(iii) உட்பிரவேச மற்றும் வெளியேறும் வாயில்கள் அமைக்கப்படும் இடங்கள்;

(iv) நிர்மாணப்பணியை ஆரம்பிப்பதற்கும் நிறைவுசெய்வதற்கும் உத்தேசிக்கப் பட்டுள்ள திகதிகள்;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அதிவேக நெடுஞ்சாலையின் மேற்குறிப்பிட்ட பகுதிக்காக இதுவரையில்,

(i) சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு;

(ii) செலுத்தப்பட்டுள்ள மொத்த நஷ்டஈட்டுத் தொகை;

(iii) செலுத்தப்படவுள்ள நஷ்டஈட்டுத் தொகை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி அதிவேக நெடுஞ்சாலையில் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

138/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆம் திகதி தொடக்கம் இதுவரை வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட எழுச்சிக் கிராமங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட ரீதியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு எழுச்சிக் கிராமத்திலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) வீடுகளை நிர்மாணிப்பதற்கு கடன் அல்லது உதவியாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள முழுத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக செலவிடப்பட்ட முழுத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இவ் வீடமைப்புத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் விழாக்களுக்கு செலவிடப்பட்ட முழுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அதில் பிரச்சார நடவடிக்கைகளுக்கான செலவுகள் எவ்வளவென்பதையும்;

(iv) அடுத்து வரும் ஆண்டுகளில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2020 மார்ச் 18, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

26/2020

கௌரவ புத்திக பத்திறண,— பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராம அலுவலர்களுக்காக சேவை பிரமாணக் குறிப்பொன்றை தயாரிக்க வேண்டும் என்பதையும்;

(ii) கிராம அலுவலர்களின் கொடுப்பனவு தொடர்பில் மீளக் கருத்திற் கொண்டு நியாயத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதையும்;

(iii) கிராம அலுவலர் சேவையில் மற்றும் அத்தொழிலில் நிலவும் சிக்கல்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கிராம அலுவலர் சேவையின் செயற்றிறனை அதிகரிப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை?

என்பதனை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

49/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் ஊவா மாகணத்தில் உயர்தரப் பரீட்சையில் உயர் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த மாணவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று ஊவா மாகாண சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், புலமைப் பரிசில் வழங்கப்பட்ட மாணவர்களின் பெயர்கள் மற்றும் அந்த புலமைப் பரிசில்களின் நிதிசார் பெறுமதி ஆகிய தகவல்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

79/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாடு முழுவதிலும் தற்போது நடாத்தப்பட்டு வருகின்ற சினிமாக் கொட்டகைகள் யாவை;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை;

(iii) இச்சினிமா கொட்டகைகளின் உரிமையாளர்கள் மற்றும் அவை ஆரம்பிக்கப்பட்டுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நாடு முழுவதிலும் அமைந்துள்ள சினிமாக் கொட்டகைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அது எவ்வாறு;

(iii) இச்சினிமா கொட்டகைகளை ஒழுங்குமுறைப்படுத்துவது யார்;

(iv) மிகக்குறைந்த வசதிகளுடனும் பலவீனமான செயற்பாட்டுடனும் கூடியதாக நடாத்தப்பட்டு வரும் சினிமாக் கொட்டகைகள் காணப்படுகின்றன என்பதை அறிவாரா;

(v) ஆமெனில், சினிமாக் கொட்டகைகளை முறைசார்ந்ததாக நடாத்திச் செல்வதற்காக, சினிமாக் கொட்டகைகளை ஒழுங்குமுறைப் படுத்தப்படுவதற்கு முறைசார்ந்த முறையியலொன்றை துரிதமாக அமைப்பாரா;

(vi) ஆமெனில் , அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

103/2020

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பற்கு,— (2)

(அ) 2014 ஆம் ஆண்டில் பதுளை மாவட்டத்தின் மீரியபெத்த மண்சரிவு காரணமாக,

(i) இறந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) ஊனமுற்றோரின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட மொத்த நட்டஈட்டுத் தொகை எவ்வளவு;

(iv) இறந்த ஒருவருக்காக அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை எவ்வளவு;

(v) சேதமடைந்த வீடுகளுக்காக செலுத்தப்பட்ட அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச நட்டஈட்டுத்தொகை எவ்வளவு;

(vi) இடம்பெயர்ந்த அனைவருக்கும் நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(vii) இடம்பெயர்ந்த குடும்பமொன்றுக்கு நிரந்தர வீடொன்றினை வழங்கிய மிகவும் கிட்டிய திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

109/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013, 2014, 2015, 2016, 2017, 2018 மற்றும் 2019 அம் ஆண்டுகளில் சனாதிபதியவர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்கள் மற்றும் மேற்படி விஜயங்களின் நோக்கங்கள்;

(ii) ஒவ்வொரு விஜயத்திற்காகவும் பங்கேற்ற ஆட்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பதவிகள்;

(iii) மேற்படி ஒவ்வொரு விஜயத்திற்காகவும் செலவிட்ட பணத்தொகை;

ஒவ்வோர் ஆண்டுவாரியாகவும் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

146/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகளீர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் 500.00 ரூபாவிலான பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட்டு 3771 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை (iii ஆம் தரம்) ஆட்சேர்ப்பு செய்வதன் பொருட்டு பரீட்சையொன்று நடத்தப்பட்டதென்பதையும்;

(ii) அப்பரீட்சையில் 75,000 இற்கும் அதிகமான விண்ணப்பதாரிகள் தோற்றினர் என்பதையும்;

(iii) அதில் சித்தியடைந்த 1904 பேருக்கு 2017 ஆம் ஆண்டு நியமனங்கள் வழங்கப்பட்டதென்பதையும்;

(iv) எஞ்சிய நபர்களுக்கு 2018 ஆம் ஆண்டு நியமனங்கள் வழங்கப்படுவதாக வாக்குறுதியளிக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மத்தியிலிருந்து எஞ்சியுள்ள 1867 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில் அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

156/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் அமைந்துள்ள,

(i) வன ஒதுக்கங்களின் அடர்த்தியும்;

(ii) வன ஒதுக்கங்களில் அமைந்துள்ள குளங்களின் எண்ணிக்கையும்;

(iii) மழைக் காடுகளும் அவற்றின் அடர்த்தியும்;

வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தங்கள் அமைச்சின் மூலம் 2017 ஆம் ஆண்டில்,

(i) சூழல் பாதுகாப்பு கருதி மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அதன் பொருட்டு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) சூழல் நேய தொழில்முயற்சிகளை மதிப்பிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) பல நகரங்கள் ஊடாக வழிந்தோடும் கழிவு நீர் ஆறுகளில் கலப்பதன் மூலம் பெருமளவில் நீர் மாசடைவதால் இவ்வாறு கழிவு நீர் நேரடியாக ஆறுகளில் கலப்பதைத் தடுக்க அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

27/2020

கௌரவ புத்திக பத்திறண,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொத்மலையிலுள்ள நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்ற, பயிலுநர் பொறியியல் உதவியாளர் இரண்டாம் குழுவின் 71 பேர் இதுவரையிலும் நிரந்தர சேவைக்கு ஆட்சேர்க்கப்படவில்லை என்பதனையும்;

(ii) குறித்த பயிற்சி நிறைவடைந்து தற்போது ஒரு வருடம் கடந்துள்ளது என்பதனையும்;

(iii) பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டு சேவையாற்றியபோதிலும் அவர்களுக்கு உரிய சம்பளம் வழங்கப்படுவதில்லை என்பதனையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவர்கள் நிரந்தர சேவைக்குள் இணைத்துக் கொள்ளப்படுவார்களா என்பதனையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

53/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) ஊவா மாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு கல்விச் சுற்றுலா பற்றி 2015 ஆம் ஆண்டில் கணக்காய்வு விசாரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

(ஆ) ஆமெனின், மேற்படி காணக்காய்வு விசாரணைக்கு அமைவாக,

(i) மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்ட பாடநெறிகள் யாவை என்பதையும்;

(ii) கலந்துகொண்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) உத்தியோகத்தர்களை தெரிவு செய்கின்றபோது பின்பற்றப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

106/2020

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015.09.01 ஆம் திகதி தொடக்கம் 2018.12.31 ஆம் திகதி வரை சனாதிபதி, பிரதம அமைச்சர், சபாநாயகர் மற்றும் அமைச்சர்களுடன் மேற்கொண்ட வெளிநாட்டு சுற்றுப்பயணங்களை உள்ளிட்டதாக ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் மேற்கொண்ட உத்தியோகபூர்வ வெளிநாட்டு சுற்றுப்பயணங்களின் எண்ணிக்கையை இறங்குவரிசைக் கிரமத்திற்கேற்ப அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

110/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர், புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015.01.09 முதல் 2019.12.31 வரை பிரதமர் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள்;

(ii) அவ்விஜயங்களின் நோக்கங்கள்;

(iii) மேற்படி ஒவ்வொரு விஜயத்திலும் கலந்து கொண்டவர்களின் எண்ணிகையும் அவர்களது பதவிகளும்;

(iv) மேற்படி ஒவ்வொரு விஜயத்திற்காகவும் செலவிடப்பட்டுள்ள பணம்;

தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

163/2020

கௌரவ ஹேஷா விதானகே,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அமைச்சின் கீழ் ஹதபிம அதிகாரசபை என்ற பெயரில் நிறுவனமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி நிறுவனத்தின் பிரதான கடமைகள் யாவை என்பதையும்;

(iii) தற்சமயம் மேற்படி அலுவலகங்கள் இயங்கிவரும் கட்டிடத்தின் பெயர் மற்றும் முகவரி யாது என்பதையும்;

(iv) இக்கட்டடத்துக்கு மாதாந்தம் மற்றும் வருடாந்தம் செலுத்தப்படும் வாடகை எவ்வளவு என்பதையும்;

(v) இந்நிறுவனத்தை கமத்தொழில் அமைச்சு இயங்கும் கட்டிடத்திலேயே கொண்டு நடாத்துவதற்கு அமைச்சிடமுள்ள வேலைத்திட்டம் என்னவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

171/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள திரு. அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக பல்வேறுபட்ட நீதி மன்றங்களில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் யாவையென்பதையும்;

(ii) அவற்றுக்கான வழக்கு எண்கள் மற்றும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் திட்டவட்டமாக யாவையென்பதையும்;

(iii) திரு. அர்ஜுன மகேந்திரனை கைது செய்வதற்காக தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அவர் தற்போது சிங்கப்பூரில் வாழ்கின்ற மற்றும் சிங்கப்பூர் இனத்தவராக இருப்பதாக குறிப்பிடப்படுவதனால் அவரைக் கைது செய்வதற்காக சிங்கப்பூர் அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(v) நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள அவரைக் கைது செய்வதற்காக பாதுகாப்புக் குழுக்கள் சிங்கப்பூர் அல்லது வேறு நாடுகளுக்கு சென்றுள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில் அந்த நாடுகள் மற்றும் திகதிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

179/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இது வரையிலும் கண்டி மாவட்டத்தில், குண்டசாலை பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தினுள், காணி அமைச்சு மற்றும் பிரதேச செயலாளருக்கு சொந்தமாக இருந்த காணியின் அளவு, ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு அடிப்படையிலும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) அக்காலப்பகுதியினுள் பொதுமக்களுக்கு அப்பிரதேசத்திலிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்ட காணியின் அளவு மற்றும் பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(iii) காணிகள் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் காணிகள் வழங்கப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(iv) மண்சரிவு மற்றும் கற்குழிகளைத் தோண்டுவதன் காரணமாக பாதிப்பு ஏற்படுகின்ற இப்பிரதேசத்தில் அபாயநேர்வு வலயத்தினுள் வசிக்கின்ற மக்களுக்கு இது வரையிலும் காணிகள் கிடைக்கப்பெறவில்லை என்பதையும்;

(v) அவ்வச்சுறுத்தலுக்குள்ளான வலயத்தினுள் வசிப்பவர்களுக்கு பொருத்தமான காணிகளை அப்பிரதேசத்திலேயே பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2020 மார்ச் 19, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

28/2020

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) க.பொ.த. (உயர் தர) மாணவர்களுக்கு கைக்கணனி (Tab) வழங்குவதற்காக வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்ட வருடம் எது என்பதையும்;

(ii) அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(iii) இதற்காக கேள்வி கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், கேள்வி கோரல்களை முன்வைத்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) அவற்றிலிருந்து தெரிவு செய்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(vi) கேள்வி கோரலின் போது சமர்ப்பிக்கப்பட்ட அளவுருக்கள் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்டவர்களுக்கு கைக்கணனி (Tab) வழங்குவதற்காக கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதனையும்;

(ii) ஆமெனில், இலங்கையிலுள்ள க.பொ.த. (உயர் தர) வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் கற்கும் மாணவர்கள் அனைவருக்கும் கைக்கணனிகளை (Tab) வழங்குவதற்கு எதிர்பார்க்கும் திகதி யாதென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

50/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சபை பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்களில் அநேகமானவர்களுக்கு நிலுவைச் சம்பளம் செலுத்த வேண்டியுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி ஆசிரியர்களுக்குரிய நிலுவைச் சம்பளத்தைச் செலுத்துவதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

113/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எஸ்பெஸ்ரோஸ் பாவனையை தடைசெய்ய அரசாங்கம் முடிவுசெய்த திகதி யாது என்பதையும்;

(ii) அதில் தாக்கம் செலுத்திய விடயங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தடைக்கென அரசாங்கம் அடிப்படையாகக்கொண்ட நிபுணர் குழு அல்லது நிபுணத்துவ அறிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அரசாங்கம் மேற்படி தடையை நீக்க முடிவுசெய்த திகதி யாது என்பதையும்;

(v) அதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(vi ) எஸ்பெஸ்ரோஸ், பாவனைக்கு உகந்ததென மீண்டும் சிபாரிசு செய்த வல்லுநர்கள் அல்லது நிபுணர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

164/2020

கௌரவ ஹேஷா விதானகே,— சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) உடவளவை யானைகள் சரணாலயத்தில் (எத் அத்துறு செவண) தற்போதுள்ள யானைகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) இந்த யானைகளை வேறு இடங்களுக்கு மாற்றியனுப்புதல் அல்லது வனத்திற்கு விடுவித்தலை மேற்கொள்வதாயின், அது எவ்வாறு;

(iii) 2005 – 2015 வருட காலப்பகுதியினுள் இங்கு காணப்பட்ட யானைக் குட்டிகள் விடுவிக்கப்பட்ட விதம் தொடர்பான அறிக்கையொன்றினை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

172/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள ஒவ்வொரு திணைக்களத்திலும் பாதுகாப்புச் செலவினத்தின் மூலம் அந்தந்தத் திணைக்களத்தில் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய பதவிகளுக்கும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் அது ஒட்டுமொத்தச் செலவினத்தின் சதவீதமாக காட்டப்படுமா என்பதையும்;

(ii) 1948 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை அரசாங்கமானது ஐக்கிய இராச்சியத்தை உள்ளிட்டதாக பாதுகாப்பு உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொண்டுள்ள நாடுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாதுகாப்பு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட நாடு, திகதி, குறித்த பாதுகாப்பு உடன்படிக்கையின் பெயரும் நோக்கங்களும் மற்றும் உடன்படிக்கை முடிவுக்கு வரும் திகதி குறிப்பிடப்படுமா என்பதையும்;

(iv) கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு உடன்படிக்கைகளுள் தற்போது செல்லுபடியானதாகவுள்ள பாதுகாப்பு உடன்படிக்கைகள் யாவையென்பதையும்;

(v) குறிப்பிட்ட பாதுகாப்பு உடன்படிக்கைகளின் பிரதிகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

180/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சூரியவெவ கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதற்காக நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட மூலங்கள் யாவையென்பதையும்;

(iii) இதுவரை அங்கு நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிகளின் எண்ணிக்கை மற்றும் போட்டி வகைகள் யாவையென்பதையும்;

(iv) இது வரை விளையாட்டு மைதானத்தின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் அதன் பராமரிப்புச் செலவினங்கள் எவ்வளவென்பதையும்;

(v) இந்த விளையாட்டு மைதானத்தை முன்னேற்றுவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

29/2020

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முத்துராஜவல சரணாலயம் இலங்கையின் விசாலமான சதுப்பு நிலம் என்பதையும்;

(ii) பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக இச்சதுப்பு நிலம் அழிவடைந்து வருகின்றது என்பததையும்;

(iii) இந்நிலப்பகுதியில் 406 ஏக்கர் வீடமைப்பு கருத்திட்டமொன்றிற்காக மெல்வத்த புறொபட்டி டெவலபர்ஸ் எனும் கம்பெனிக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட வீடமைப்பு கருத்திட்டத்திற்காக பர்ச்சஸ் ஒன்று எவ்வளவிற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இக்கொடுக்கல் வாங்கல் சட்டத்திற்கு முரணானது என்பதை ஏற்றுக்கொள்வீர்களா என்பதையும்;

(iii) ஆமெனில், இக்கருத்திட்டத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

55/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊவா மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான வீதிகளின் கிலோமீற்றர் அளவு, ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தரப்படுத்தலுக்கமைய மேற்படி அளவுகள் தனித்தனியே யாது என்பதையும்;

(iii) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை காப்பட் இடப்பட்ட ஊவா மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான பதுளை மாவட்டத்தின் வீதிகளின் கிலோமீற்றர் அளவு, வருடாந்த அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(iv) ஊவா மாகாண சபைக்கு உரித்தான வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கும், பராமரிப்புச் செய்வதற்கும் நிதி ஏற்பாடுகளை வழங்கும் மூலங்கள் யாவை என்பதையும்;

(v) 2013 முதல் 2016 ஆம் ஆண்டு வரை மேலே (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள மூலங்களின் கீழ் பதுளை மாவட்டத்தின் மாகாண வீதிகளை அபிவிருத்தி செய்வதற்குச் செலவிடப்பட்ட பணத்தொகை, ஒவ்வொரு வருடத்துக்கு மற்றும் மூலங்களுக்கு அமைய தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

165/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 தொடக்கம் 2015 வரையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராம எழுச்சி வீடமைப்பு திட்டங்களின் எண்ணிக்கை யாது?

(ii) அதன் மூலமாக வீடுகள் உரித்தான பயனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போதைய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள எழுச்சிக் கிராமங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அதன் மூலமாக நிவாரணங்களைப் பெற்றுக்கொண்ட பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) நாட்டின் ஏனைய வீடமைப்புத் தேவைகளை நிறைவேற்ற மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

173/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில்,

(i) இலங்கை இராணுவச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இராணுவ நீதிமன்றத்தினால் தண்டனைகள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் படைவீரர்களின் எண்ணிக்கை;

(ii) இலங்கை வான் படைச் சட்டத்தின் பிரகாரம் அதன் நீதிமன்றத்தினால் தண்டனைகள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் படைவீரர்களின் எண்ணிக்கை;

(iii) இலங்கை கடற் படைச் சட்டத்தின் பிரகாரம் அதன் நீதிமன்றத்தினால் தண்டனைகள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் படைவீரர்களின் எண்ணிக்கை;

ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2010 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை,

(i) இலங்கையின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் பயன்படுத்தப்பட்ட தொகை;

(ii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீடுகளிலிருந்து பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள ஒவ்வொரு திணைக்களத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் அளவு;

யாதென்பதை ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

181/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்தல விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(ii) மேற்படி பணம் பெறப்பட்ட தோற்றுவாய்கள் யாவை;

(iii) மேற்படி விமான நிலையம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நாளில் இருந்து இற்றைவரை பெற்ற வருமானம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக உறப்பட்ட செலவுகள் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) இந்த விமான நிலையம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நாளில் இருந்து இற்றைவரை அங்கு வந்த விமானங்களின் எண்ணிக்கை மற்றும் விமானச் சேவை நிறுவனங்களின் பெயர்கள் யாவை;

(v) இந்த காலப்பகுதிக்குள் மத்தல விமான நிலையம் ஊடாக பயணித்த பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மத்தல விமான நிலையத்தை விருத்திசெய்தல் தொடர்பிலான அரசாங்கத்தின் நோக்கு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2020 மார்ச் 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

39/2020

கௌரவ புத்திக பத்திறண,— உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பாவனையாளர் அலுவல்கள் தொடர்பான அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட சந்தை சுற்றி வளைப்புக்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அறவிடப்பட்ட தண்டப்பணத் தொகையினை ஒவ்வொரு ஆண்டு அடிப்படையிலும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) சுற்றி வளைப்பின் மூலமாக குற்றவாளியாகும் வர்த்தக நிலையங்கள் மற்றும் ஆட்கள் தொடர்பான தொடராய்வு நடவடிக்கையொன்று பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையிடம் காணப்படுகின்றனதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எந்த அடிப்படையிலாகும் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மோசடியான வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பில் பாவனையாளர்கள் முறைப்பாடு செய்யக்கூடிய சந்தர்ப்பங்களை விரிவாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

159/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— சமுதாய வலுவூட்டல்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில், பெருந்தோட்டக் கம்பனிகளைச் சார்ந்ததாக சேவையாற்றுகின்ற ஊழியர்களிலும் அவர்களின் குடும்பங்களிலும் போசாக்கின்மை உயர் மட்டத்தில் காணப்படுகின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) முன்னைய அரசாங்கத்தினால் மக்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்கச் செய்வதற்காக வழங்கப்படுகின்ற "போசாக்குப் பொதி" வேலைத்திட்டத்திற்கு இணையாக, பெருந்தோட்டக் கம்பனிகளின் ஊடாகவும் மேற்படி மக்களுக்கு போசாக்குப் பொதியொன்றை பெற்றுக் கொடுத்தல் பொருத்தமாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், பெருந்தோட்டக் கம்பனிகளின் ஊடாக அத்தகைய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

166/2020

கௌரவ ஹேஷா விதானகே,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உத்தியோகத்தர் தெரிவுக்கான தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள கிரிக்கெட் விளையாட்டு கழகங்கள் மற்றும் மாவட்ட கிரிக்கெட் சங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவ்வாறான ஒவ்வொரு கிரிக்கெட் சங்கத்தின் பெயர் மற்றும் முகவரி அத்துடன் அவற்றுக்குரிய வாக்குகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) முன்னைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் விளையாட்டு சங்கம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டுள்ள நிதி மற்றும் ஏனைய உதவிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் மேற்படி சங்கங்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்கும் செயற்பாடு முறையாக இடம்பெறுகிறதா என்பதை ஆராய்வதற்கு அமைச்சில் காணப்படும் வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

174/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் விளக்கமறியலில் அல்லது சிறையிலிடப்பட்டுள்ள உளவுப் பிரிவு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவர்கள் சிறையிலிடப்பட்ட அல்லது விளக்கமறியலிலிடப்பட்ட திகதிகள் யாவையென்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மற்றும் வழக்கு எண்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி உளவுப் பிரிவு உத்தியோகத்தர்கள் தொடர்பாக இராணுவச் சட்டங்கள் மற்றும் பொலிசுக் கட்டளைச் சட்டம் என்பன பரிசீலிக்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில் அக்கால கட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

182/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக செலவாகிய பணத்தொகை எவ்வளவு;

(ii) மேற்படி பணத்தொகையை பெற்றுக்கொண்ட தோற்றுவாய்கள் யாவை;

(iii) துறைமுகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நாள்முதல் இற்றைவரை அத்துறைமுகத்திற்கு வந்த கப்பல்களின் எண்ணிக்கை, அக்கப்பல்களின் பெயர்கள் மற்றும் தரையிறக்கிய கொள்கலன்களின் எண்ணிக்கை மாதாந்தம் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) அக்காலப்பகுதிக்குள் துறைமுகத்தின் வருமானம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் வெவ்வேறாக எவ்வளவு;

(v) அம்பாந்தோட்டை துறைமுகத்தை பிராந்தியத்தின் முன்னேற்றமடைந்த துறைமுகமாக மாற்றுதல் தொடர்பிலான அரசாங்கத்தின் நோக்கு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

40/2020

கௌரவ புத்திக பத்திறண,— கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கஹட்டகஹ கிரபைட் லங்கா கம்பனியினால் காரீயம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற பிரதான நாடுகள் யாதென்பதையும்;

(ii) மேற்குறித்த நாடுகளுக்கு மேலதிகமாக புதிய கொள்வனவாளர்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நாடுகள் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் காரீயம் உற்பத்தி ஒவ்வொரு ஆண்டு அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) வருடாந்தம் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எந்தளவில் என்பதையும்;

(iv) இச்சுரங்கத்தில் காணப்படுகின்ற காரீயத்தின் அளவுதொடர்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனதா என்பதையும்;

(v) ஆமெனில், சுரங்கத்திலிருந்து மேலும் அகழ்ந்தெடுக்கக் கூடிய காரீயத்தின் அளவு எத்தனை மெக்ரிக் தொன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

160/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 09 ஆம் திகதிய அமை/15/0180/6/3/008 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்துக்கமைய அமைச்சரொருவருக்கு நியமிக்கக்கூடிய ஆலோசகர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இருப்பினும், முன்னைய ஊவா மாகாண ஆளுநரினால் முன்னைய ஊவா மாகாண முதலமைச்சருக்கு 07 ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆலோசகர் நியமனம் தொடர்பாக தெளிவான அமைச்சரவை தீர்மானமொன்று இருக்கையில், அதனை கவனத்தில் கொள்ளாது ஊவா மாகாண முன்னைய முதலமைச்சருக்கு 07 ஆலோசகர்கள் எந்த சட்ட ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்பட்டார்கள் என்பதையும்;

(iv) இது தொடர்பாக கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கமைய சீராக்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

167/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உமா ஒயா கருத்திட்டத்தின் காரணமாக பெரும் குடிநீர்த் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்துள்ள;

(i) பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) உமா ஓயா கருத்திட்டத்தின் காரணமாக பெரும் குடிநீர்த் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்துள்ள மக்களின் நீர்த் தேவையினை பூர்த்தி செய்வதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

175/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது காணப்படுகின்ற அரசாங்கத்திற்குச் சொந்தமான மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமற்ற தனியார் பட்டம் வழங்கலுக்கான அதிகாரத்தைக் கொண்டுள்ள நிறுவனங்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவற்றின் பீடங்கள், துறைகளின் பெயர்கள், துறைகளின் எண்ணிக்கை மற்றும் மாணவர்கள் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) அவ்வாறான நிறுவனம் ஒவ்வொன்றுக்கும் பட்டம் வழங்குவதற்கான அதிகாரத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்ட குழு அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்;

(iii) இதற்கு மேலதிகமாக, பட்டமளிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி அமைச்சினால் தரநியமங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படாத பட்டம் வழங்கும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சின் அங்கீகாரமின்றி, இலங்கையில் வலுவிலுள்ள எச்சட்டத்தின் கீழ் மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு பட்டம் வழங்குவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா

(ஆ) இன்றேல், ஏன்?

183/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புகையிரத நூதனசாலை தாபிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட மூலங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி நூதனசாலை அரச பணம் செலவிடப்பட்டு தாபிக்கப்பட்டதன் பின்னர் அது பேணிச் செல்லப்படுவதற்காக தனியார் கம்பெனியொன்றுக்கு சாட்டப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) பதுளை மற்றும் கடுகண்ணாவ ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஏனைய நூதனசாலைகளை முன்னேற்றுவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்தையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?